www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

LIII

பதிவு எண் / Register No.

TNPSC - SPECIMEN

2018

சட்டத் தாள் III

# LAW PAPER III

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

நேரம் : 3 மணி

Duration : 3 Hours

மொத்த மதிப்பெண்கள் : 100

Max. Marks : 100

SEAL

*விண்ணப்பதாரர்களுக்கான பொது குறிப்புகள் :*

*General Instructions to candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண் மற்றும் தரப்பினர்களின் பெயர் ஆகியவை கற்பனையே. இருப்பினும், விண்ணப்பதாரர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்
The facts and particulars provided in the Question Paper i.e. the court name, place, case numbers and names of parties are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purposes of solving the questions.

ii) விண்ணப்பதாரர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் ஆங்கிலத்திலும், தமிழிலும் மாறி மாறி விடையளிக்க கூடாது.
Candidates may write the answers either in English or in Tamil but not in both.

iii) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில தரப்பில் தரப்பட்டுள்ள வடிவே முடிவானது
The Question Paper is provided in Tamil and English versions. In all matters and the cases of doubt, English version is final.

www.prepp.in

Your Personal Exams Guide

TNPSC - SPECIMEN

TNPSC - SPECIMEN

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

சட்டத் தாள் III

# LAW PAPER III

பிரிவு அ — (4 × 10 = 40)

## SECTION A — (4 × 10 = 40)

குற்றச்சாட்டு வனைதல்

## FRAMING OF CHARGES

TNPSC - SPECIMEN

குறிப்பு :

***Note :***

i) இந்த பிரிவில் நான்கு கேள்விகள் உள்ளன. அவை அனைத்திற்கும் விடை அளிக்க வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் 10 மதிப்பெண் கொண்டது.

This section contains four questions and all the four shall be attended. Each question carries 10 marks.

ii) விண்ணப்பத்தாரர்கள் தங்களை நீதிமன்றத்தின் நடுவராக அனுமானித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள இறுதியறிக்கையில் உள்ள விவரங்களின் அடிப்படையில் ஒவ்வொரு எதிரிக்கும் எதிராக குறிப்பிட்ட குற்றச்சாட்டு வனைதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் எதிரி மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க போதுமான ஆதாரம் இல்லை என எண்ணுவார்களானால், எதிரியை குற்றச்சாட்டிலிருந்து தக்க காரணங்கள் குறிப்பிட்டு விடுவித்தல் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

The candidates are to assume that they are the Presiding Officers and they are to consider the details of the final report furnished herein below and frame necessary charges specifically against each accused. If the candidates feel that the accused are to be discharged they shall pass reasoned order discharging the accused.

iii) விண்ணப்பதாரர்கள் வழக்கின் தலைப்பு (Cause Title), நீதிமன்ற எண், நீதிபதியின் பெயர், வழக்கின் எண், வழக்கறிஞர்களின் பெயர்கள் போன்றவற்றை குறிப்பிட தேவையில்லை. அவ்வாறு குறிப்பிட்டாலும் அதற்கு தனியாக மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது.

Candidates need not write the cause title of the case, court number, the name of the Judge, case number, name of the Advocates etc., No marks will be awarded for writing cause title.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

1. முதலாம் எதிரியின் மனைவியான குற்றமுறையீட்டாளர், தன் கணவருடன் கணவரின் வீட்டில் வசிக்கையில், 23.11.2009 அன்று பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் தன் கணவரான முதலாம் எதிரி, தன் கணவரின் குடும்ப உறுப்பினர்களான அவருடைய தாயார் இரண்டாம் எதிரி, அவருடைய சகோதரிகளான 3, 4 எதிரிகள் ஆகியோர் தன்னை வார்த்தைகளால் பழித்து வன்கொடுமை செய்ததாக, ஒரு புகார் கொடுத்துள்ளார். 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக தமிழ் நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1998, பிரிவு 4-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

The defacto complainant, wife of the 1st accused, while living with her husband in the matrimonial home, had preferred a complaint against her husband the 1st accused and his family members namely the 2nd accused her mother-in-law, 3 and 4 accused her sister-in-laws, alleging that the accused persons abused her verbally and harassed her on 23.11.2009 in the house of the accused at about 3.00pm. The final report was laid against accused 1 to 4 for offences under sec. 4 of Tamil Nadu Prohibition of Harassment of Women Act, 1998.

TNPSC - SPECIMEN

2. 13.06.2015 - ஆம் தேதி சுமார் 20.00 மணியளவில் 1 முதல் 4 எதிரிகள் கையில் உருட்டுக்கட்டைகளுடன் 5-ம் மற்றும் 6-ம் எதிரிகளுடன் சென்னை, கோட்டூர்புரம், பிளாக் 71-ல் உள்ள குற்றமுறையீட்டாளரான டேவிட் என்பவரின் கடைக்கு முன்பாக சட்டத்துக்கு புறம்பான கும்பலாக ஒன்றுகூடினர். அச்சமயம் முதலாம் எதிரி, "தெவ்டியா மகனே என் தங்கச்சியவா கிண்டல் பண்ற" என்று கூறி டேவிடின் கடைக்குள் அத்துமீறி நுழைந்து அவரை உருட்டு கட்டையால் தலையில் தாக்கி அவருக்கு சொற்ப காயங்களை விளைவித்தார். 2-ம் எதிரி கடைக்குள் நுழைந்து உருட்டுகட்டையால் டேவிட்டின் கால்களை தாக்கி அவருக்கு காயங்கள் விளைவித்தார். டேவிட்டின் சகோதரரான ஜான் தலையிட்ட போது 4-ஆம் எதிரி உருட்டுக்கட்டையால் அவருடைய முகத்தை தாக்கினார், அதன் விளைவாக அவருடைய இடது கடைவாய் பல் உடைந்து போனது. எதிரிகள் 3, 5, 6, ஆகியோர் டேவிடை பார்த்து, இனிமேல் இதுபோல் நடந்தால் மோசமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தனர். தனக்கு காலில் ஏற்பட்ட காயத்தால் டேவிட் படுத்த படுக்கையாகி 05.07.2015-வரை "எம்.என். மருத்துவமனையில்" உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். டேவிடுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர், அவருக்கு சொற்ப காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் ஜானுக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் சான்றளித்துள்ளார். கோட்டூர்புரம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் பிரிவு 147, 148, 323, 326 உ/இ. 149, 452, 294(ஆ) மற்றும் 506 (ii) இதச-ன் கீழ் எதிரிகள் 1 முதல் 6க்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

www.prepp.in

Prepp Your Personal Exams Guide

On 13.6.2015 at about 20.00 hours the accused A1 to A4 armed with wooden logs along with A5 and A6 formed themselves into an unlawful assembly in front of the shop of the defacto complainant David at Block No.71, Kotturpuram, Chennai and A1 by uttering "தெவ்டியா மகனே என் தங்கச்சியவா கிண்டல் பண்ற", trespassed into the said shop and assaulted David with wooden log on his head causing simple injury. The second accused entered the shop and assaulted David on his legs with wooden log causing injury. When John, brother of David intervened he was also assaulted on his face by A4 with wooden log resulting in loss of his left molar tooth. A3, A5 & A6 threatened David that if the same is repeated in future he will face dire consequences. Due to the injury sustained on the leg, David was bed ridden and he underwent treatment as in-patient till 05.7.2015 at 'MN' Hospital. The Doctor who treated David opined that David has suffered simple injuries and John has suffered grievous injuries. The Inspector of Police of Kotturpuram Police Station laid final report as against A1 to A6 for offences under sec., 147, 148, 323, 326 r/w. 149, 452, 294(b) and 506(ii) IPC.

TNPSC - SPECIMEN

3. 27.06.2001 பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் முதலாம் எதிரியை கீரின் ஹோட்டல், ரெட்டில்ஸ், என்ற உணவகத்தில் சந்தித்த குற்ற முறையீட்டாளரான குமார் அவர்கள், முதலாம் எதிரி தன்னிடம் வாங்கிய ரூ. 50,000/-ஐ திருப்பி தராத காரணத்தால் அவரை கடிந்து பேசினார். இச்சம்பவத்தை முதலாம் எதிரி தன்னுடைய சகோதரர்களான 2 மற்றும் 3 எதிரிகளிடம் கூறினார். பின்னர் அவர்கள் ஒருவருக்குகொருவர் பேசி குமாரை அடிப்பது என்று முடிவு செய்தனர். அதே நாள் இரவு 08.30 மணியளவில், குமார் அவருடைய வீட்டிற்கு வழக்கமாக போகும் வழியில் உள்ள காட்டுப்பாக்கம் ஐயப்பன் கோவில் அருகே எதிரிகள் 1 முதல் 3 பேரும் ஒன்று கூடினர். குமார் அவ்வழியே கடந்து சென்ற பொழுது ஐயப்பன் கோவிலிக்கு பின்னால் ஒளிந்து கொண்டிருந்த முதல் எதிரி, சுமார் 150 அடி தூரத்தில் நின்றுகொண்டிருந்த மற்ற எதிரிகளுக்கு, குமாரின் வருகையை அறிவிக்க சீட்டி அடித்து சிமிக்கைகள் செய்தார். அச்சமயம் 2-ம் எதிரி குமாரை பிடித்துக் கொள்ள 3-ம் எதிரி அவரை கத்தியால் குத்தினார். அதன் காரணமாக குமாருக்கு அவரது வலது தோளில் கொடுங்காயங்கள் ஏற்பட்டது. ஆகையால், 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவு 341, 326 உ/இ 34 இதச-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்ததாக இறுதி அறிக்கை ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

www.prepp.in

On 27.6.2001 at 2.30 pm at Green Hotel, Red hills, the defacto complainant Kumar met A1 at the hotel, abused A1 for not returning back Rs. 50,000/ which he had borrowed from him. A1 confided the incident to his brothers A2 and A3 at his home and they mutually decided to beat Kumar. On the same day at 8.30 pm A1 to A3 gathered near Ayyappan temple at Kattupakkam through which Kumar passes regularly to his home. When Kumar passed by, A1 who was hiding behind the Ayyappan temple whistled and signalled Kumar's arrival to the other accused who were standing 150 ft away. A2 caught hold of Kumar while A3 assaulted him with a knife there by causing grievous injury on his right shoulders. The final report has been filed by the Inspector of police charging A1 to A3 for offences under sec. 341, 326 r/w. 34 IPC.

TNPSC - SPECIMEN

4. மாவட்ட குற்றப்பிரிவு போலிசால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் படி முதல் எதிரி ராமன், இரண்டாம் எதிரி ஹரி மற்றும் குற்றத்தை ஒப்புக் கொண்ட சாமிபிள்ளை ஆகியோர் நெருங்கிய நண்பர்கள். மேலே கூறப்பட்ட மூவரும், 12.07.1996 - 14.11.1996-ம் இடைப்பட்ட காலத்தில் சுரேஷ் என்பவரையும், குற்றமுறையீட்டாளரான விருதுநகர், பாரத ஸ்டேட் வங்கி பிரதான கிளையையும், உண்மைக்கு புறம்பாக நம்பவைத்து மோசடி செய்து, மேற்படி வங்கியை இணங்க வைத்தும் ரூ. 1,40,000/-ஐ சுரேஷின் கணக்கிலிருந்து பெற்றுள்ளனர். இரண்டாம் எதிரியான ஹரி, 12.07.1996-ல் ரூ. 75,000/-ம், 14.08.1996-ல் ரூ. 55,000/-ம் சுரேஷின் சேமிப்பு வங்கி கணக்கு எண். 95/21379-ல் இருந்து பெற்றுள்ளார். அதேபோல், குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ள சாமிபிள்ளையும், 08.11.1996ல் ரூ. 5,000/-ம், 13.11.1996-ல் ரூ. 5,000/-ம் பெற்றுள்ளார். மேற்கூறிய பரிவர்தனையின் போதே முதலாம் எதிரி ராமன் கையெழுத்து மோசடி செய்து சேமிப்பு கணக்கு எண். 95/21379 -ற்க்கான போலியாக ஒரு நகல் வங்கி கணக்கு புத்தகத்தை உருவாக்கி, அதனை மோசடி செய்ய உபயோகப்படுத்துவதற்காக, உண்மை கணக்கு புத்தகத்தில் உள்ள 05.08.1995 முதல் 22.02.1996 வரை உள்ள பரிவர்த்தனைகளை, போலியாக தயாரிக்கப்பட்ட நகல் வங்கி கணக்கு புத்தகத்தில் எழுதி உள்ளார்.

அதே பரிவர்தனையின் போது, இரண்டாம் எதிரி ஹரியும், குற்றத்தை ஒப்புக் கொண்ட சாமிபிள்ளையும், மோசடி செய்ய பயன்படுத்துவதற்காக, பணம் எடுக்க பயன்படுத்தும் தாள்கள் நான்கில் மோசடி செய்துள்ளனர்.

இரண்டாம் எதிரி ஹரி பணம் எடுக்கும் தாள்களில் மோசடி செய்து அவைகளை உபயோகிக்கும் பொழுது, அவைகள் மோசடியானவைகள் என்று நன்கு தெரிந்தும், அவற்றை உண்மையான தாள்கள் என்பது போல உபயோகித்துள்ளார்.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

முதலாம் எதிரி, குற்றம் புரியும் சமயம், இரண்டாம் எதிரியை கூட்டாளியாக்கி, முதல் இரண்டு பணம் எடுக்க பயன்படுத்தும் தாள்களில் பரிவர்தனை குறித்த குறிப்புகளை இரண்டாம் எதிரியை நிரப்பச் சொல்லி பின்னர் அவற்றில் அவரை கையெழுத்திடவும் இணங்கவைத்துள்ளார். அதே போல் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டவருடனும் கூட்டு சேர்ந்து, மீதி உள்ள இரண்டு பணம் எடுக்க பயன்படுத்தும் தாள்களையும் அவரை நிரப்பச் சொல்லி இணங்கவைத்துள்ளார். ஆகையால், எதிரிகள் மீது பிரிவு 468, 420, 471, 420 உ/இ 109 இதச-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளனர் என்று கருதி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

According to the final report laid down by the DCB Police, Virudhunagar, A1 Raman, A2 Hari and approver Samy Pillai are close friends. Between 12.7.1996 and 14.11.1996, all the three of them had cheated one Suresh and the complainant State Bank of India, Main branch, Virudhunagar fraudulently and dishonestly, deceiving and inducing the Bank to deliver a sum of Rs. 1,40,000/- from Suresh's account. The 2nd accused Hari had withdrawn, on 12.7.1996, Rs. 75,000/- and on 14.8.96, Rs. 55,000/-, from Suresh's Savings Bank Account No.95/21379. Similarly on 8.11.96 Rs. 5,000/-, and on 13.11.96 Rs. 5,000/- have been withdrawn by the approver Samy Pillai. During the same course of transaction, the 1st accused Raman had forged and created a duplicate pass book of S.B. Account No. 95/21379 and had made entries in it for the period 5.8.1995 to 22.2.1996 (i.e.) the entries found in the original passbook, intending that the forged passbook shall be used for the purpose of cheating.

During the same course of transaction, A2 Hari and approver Samy Pillai, had forged certain documents namely 4 withdrawal slips intending that it shall be used for the purpose of cheating.

TNPSC - SPECIMEN

During the same course of transaction, A2 had fraudulently used as genuine, certain documents namely withdrawal slips which he knew to be forged documents even at the time when he used them and similarly the approver had also used forged withdrawal slips knowing fully well that they were forged documents even at the time when they were used.

A1 had abetted A2 in the commission of offence by inducing A2 to fill up the body of the first two withdrawal slips and also induced him to sign the withdrawal slips. He had similarly abetted the approver and induced him to fill up the remaining 2 slips. Hence charges for offences u/s 468, 420, 471, 420 r/w 109 IPC against the accused have been laid.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

# பிரிவு ஆ — (2 × 30 = 60)

# SECTION B — (2 × 30 = 60)

## தீர்ப்புரை எழுதுதல்

## WRITING JUDGMENT

குறிப்பு :

*Note :*

TNPSC - SPECIMEN

i) விண்ணப்பதாரர்கள் வழக்கின் தலைப்பு (Cause Title), நீதிமன்ற எண், நீதிபதியின் பெயர், வழக்கின் எண், வழக்கறிஞர்களின் பெயர்கள் போன்றவற்றை குறிப்பிட தேவையில்லை. அவ்வாறு குறிப்பிட்டாலும் அதற்கு தனியாக மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது. வழக்கு சங்கதிகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலிக்கப்படும் விதம், சட்டத்தின் பயன்பாடு மற்றும் தீர்வு முடிவுகளுக்காக குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின், அடிப்படையிலேயே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

Candidates need not write the cause title of the case, court number, name of the Judge, case number, name of the Advocates etc., no marks will be awarded for writing cause title. Marks will be awarded based on appreciation of facts and evidence, for application of Law, the reasoning given by the candidates for arriving at whatever conclusion they have reached.

ii) விண்ணப்பதாரர்கள் தங்களை நீதிமன்றத்தின் நடுவராக அனுமானித்து, பிரச்சனைக்கான தீர்வு (Points for Determination) -லிருந்து தொடங்கி தீர்ப்புரை எழுத வேண்டும்.

The candidates are to assume the role of the Presiding Officer and they are to write the Judgment commencing from Points for Determination.

iii) இந்த பிரிவில் இரண்டு கேள்விகள் உள்ளன. அவை இரண்டிற்கும் விடை அளிக்க வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் 30 மதிப்பெண் கொண்டது.

There are two questions in this section and each question carries 30 marks. Candidates are to answer both the questions.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

5. கீழ்கண்ட விவரங்கள் குறிப்பிட்டு வழக்கின் புகார்தாரர் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973, பிரிவு 190 (1) (a) உடன் இணைந்த பிரிவு 138-ன் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 200-ன் கீழ் தனிப்புகார் தாக்கல் செய்துள்ளார்:

புகார்தாரர் தனக்கு சென்னை விருகம்பாக்கம் வருவாய் கிராமத்தில் 5 செண்ட் நிலம் உள்ளது என்றும் தனக்கு பரிச்சயமான எதிரி அந்த நிலத்தினை ரூபாய் 2 கோடிக்கு கிரயம் பெற விருப்பம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரி முழு கிரய தொகைக்கு முத்திரைத் தீர்வை செலுத்துவதை தவிர்க்க வேண்டியும் அதேப்போல் புகார்தாரர் முழு கிரய தொகைக்கு மூலதன ஆதாய வரி (Capital gains tax) செலுத்துவதை தவிர்க்க வேண்டியும் இரு தரப்பினரும் கிரயப்பத்திரத்தில் கிரய தொகையாக ரூ. 75 லட்சம் மட்டும் குறிப்பிடலாம் என ஒப்புக் கொண்டனர்.

இவ்வாறு ஒப்புக்கொண்டது போல் 10.05.2016 தேதியில் ரூ. 75 லட்சத்தை கிரய தொகையாக காண்பித்து கிரயபத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது. மேலும், இந்த ரூ. 75 லட்சம் வரைவு காசோலையாக வழங்கபடுவதாகவும் கிரய பத்திரத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே தேதியிலேயே மீதி கிரயத் தொகைக்கு எதிர், 10.05.2016 தேதியிட்ட எண். 101017 கொண்ட ரூ. 1.25 கோடிக்கான தனது பாரத ஸ்டேட் வங்கி விருகம்பாக்கம் கிளை வங்கி கணக்கு காசோலையை வழங்கினார்.

TNPSC - SPECIMEN

இந்த காசோலையை புகார்தாரர் பணமாக்க தனது விருகம்பாக்கம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் தாக்கல் செய்தபோது அந்த காசோலை 12.05.2016 தேதியில், எதிரியின் வங்கி கணக்கில் போதிய தொகை இல்லை என வங்கியின் மேல் குறிப்புடன் திருப்பப்பட்டது. புகார்தாரர் 16.05.2016 தேதியில் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 1881, 138ன் கீழ் அறிவிப்பினை எதிரிக்கு அனுப்பினார். அந்த அறிவிப்பு 19.05.2016 தேதியில் "பெறுநர் இல்லை, தகவல் கொடுக்கப்பட்டது" என்ற குறிப்புடன் திருப்பப்பட்டது. எனவே புகார்தாரர் 20.05.2016 தேதியில் இரண்டாவது அறிவிப்பினை எதிரிக்கு அனுப்பினார். எதிரி இந்த அறிவிப்பினை 22.05.2016 தேதியில் பெற்றுக்கொண்டு காசோலைத் தொகையோ பதில் அறிவிப்போ கொடுக்கவில்லை.

புகார்தாரரின் பிரமாண வாக்குமூலத்தை பதிவு செய்து பின்னர் எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணச்சட்டம், 1881, பிரிவு 138-ன் கீழான குற்றத்தை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருப்பதாக நீதிமன்றம் கருதியதனால் வழக்கினை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணையுடன் வழக்கு ஆவணங்களும் அனுப்பப்பட்டது. எதிரி ஆஜரான உடன் குற்றம் குறித்து எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார்.

புகார்தாரர் தரப்பில், புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். வங்கியிலிருந்து திருப்பப்பட்ட எதிரியின் காசோலை, வங்கியின் குறிப்பு, எதிரிக்கு அனுப்பப்பட்ட இரண்டு அறிவிப்புகள், முதல் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை, இரண்டாம் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை, புகார்தாரரால் எதிரிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரயபத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆகியவை அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

அ.சா.2 எதிரி மற்றும் புகார்தாரர் இருவருக்கும் பொது நண்பராவார். அவர் தனது சாட்சியத்தில் புகார்தாரர் மற்றும் எதிரி இருவருமே சொத்தின் கிரய தொகை ரூபாய் 2 கோடி என்று ஒப்புக் கொண்டதாகவும், எதிரி இந்த வழக்கு காசோலையை பாக்கி கிரய தொகைக்கு வேண்டிதான் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் விவரங்களை எதிரிக்கு எடுத்துக் கூறி குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313 (1) (b) கீழ் விசாரித்த போது எதிரி அந்த கூற்றுகளை குறிப்பிட்டு மறுத்தார்.

எதிரி தரப்பில் எந்த சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

TNPSC - SPECIMEN

புகார்தாரர் தரப்பில், வழக்கு காசோலையில் உள்ள எதிரியின் கையெழுத்து மறுக்கப்படவில்லை என்றும் எனவே மாற்று முறை ஆவணச் சட்டம், 1881, பிரிவு 139 கீழான துணிபுவின் (presumption) பலன்கள் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும் எதிரி இந்த துணிபுவினை (presumption) மறுத்தளிக்கவில்லை என்றும் எனவே அவர் இவ்வழக்கில் தண்டிக்கத்தக்கவர் என்றும் மேலும் புகார்தாரருக்கு தகுந்த நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கது என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டு அறிவிப்புகளை புகார்தாரர் எதிரிக்கு அனுப்பியுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மேலும் சட்டத்திற்கு உட்பட்ட கடன் அல்லது கடப்பாடு (legally enforceable debt or liability) இல்லை என்றும், பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகளுக்கு எதிராக புகார்தாரர் தற்போது சாட்சியம் அளிக்க இயலாது என்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரால் வாதிடப்பட்டது.

The complainant preferred Private complaint under 190(1) (a) r/w. 200 Code of Criminal Procedure, 1973 for offence under sec. 138 of Negotiable Instruments Act containing the following details:

The complainant has claimed that he owned five cents of land at Virugambakam Revenue village, Chennai and the accused who was acquainted to him expressed his willingness to purchase the property for a sum of Rs. 2 crores. Both the parties agreed that the sale consideration would be shown as Rs. 75 lakhs in the sale deed so as to evade stamp duty which would help the purchaser, while the complainant would also be benefited by evasion of capital gains tax for the entire sum. As agreed, the sale deed showing the consideration of Rs. 75 lakhs was executed on 10.5.2016, this amount of Rs.75 lakhs was given by way of demand draft and it was also recorded in the sale deed. The accused also issued cheque bearing no. 101017 drawn on State Bank of India, Virugambakam Branch dt. 10.5.2016 for the balance sale consideration of Rs. 1.25 crores on the same day.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

When the complainant presented the cheque into his Indian Overseas Bank Account at Virugambakam, the cheque was returned on 12.5.16 with the Banker's endorsement "Insufficient funds". Statutory notice under Section 138 of Negotiable Instruments Act, 1881 was issued on 16.5.16 and the same was returned on 19.5.16 with endorsement "intimation served addressee absent". Hence, the complainant issued a second notice on 20.5.16 and the same was received by the accused on 22.5.16, but he neither replied nor paid the cheque amount.

After recording sworn statement of the complainant, Court took cognizance against the accused for the offences under Section 138 Negotiable Instruments Act, 1881 and issued summons to the accused along with documents filed by the complainant. On appearance and questioning, the accused denied the offence and evidence was recorded on the side of the complainant. The complainant was examined as PW1 and the dishonoured cheque, Banker's endorsement, two legal notices with returned cover and acknowledgment card respectively and certified copy of the sale deed executed by the complainant in favour of the accused were marked as Exhibits P1 to P7. PW2 is a common friend of the accused and the complainant. He has deposed that the sale consideration was mutually agreed upon by both parties and fixed at Rs. 2 crores and that the subject cheque was issued for the balance consideration only.

When these incriminating circumstances made out from the evidence were put to the accused under section 313 (1) (b) Code of Criminal Procedure and questioned, the accused specifically denied the allegations.

TNPSC - SPECIMEN

No oral or documentary evidence was adduced on the side of the accused. Both sides were heard.

On the side of the complainant it was submitted that the accused has not denied his signature or the issuance of cheque and hence presumption under sec. 139 Negotiable Instruments Act, 1881 has to be invoked and as the accused has not rebutted the presumption, he is liable to be punished and the complainant must be compensated.

The counsel for the accused submitted that issuance of second notice is not permissible and further that there is no legally enforceable debt or liability and the complainant cannot depose against the recitals of the sale deed.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

6. கோவை ரேஸ் கோர்ஸ் காவல் நிலைய காவல் துறை ஆய்வாளர் அவர்களால் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையில் தெரியவரும் வழக்கானது எதிரி 15.01.2008 ஆம் தேதி இரவு, கோவை ரேஸ் கோர்ஸ் வால்மீகம் வீடு என்ற புகார்தாரரின் வீட்டில் மாடிபடிக்கட்டு கதவின் தாழ்ப்பாளை உடைத்து புகார்தாரரின் வீட்டின் உள்ளே அத்துமீறி நுழைந்து படுக்கை அறையில் இருந்த அலமாரியிலிருந்து தலா இரண்டு சவரன் எடையுள்ள தங்க வளையல்கள் ஐந்தும், தலா ஒரு சவரன் எடையுள்ள தங்க மோதிரங்கள் மூன்றும் திருடிச்சென்றதாக எதிரியின் மீது இ.த.ச. பிரிவு 457, 380ன் கீழான குற்றத்திற்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானவுடன் அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு கோப்பு நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு வழங்கப்பட்டன. குற்றம் குறித்து எதிரியிடம் வினவியபோது எதிரி அதனை மறுத்தார். அனைத்து ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும் எதிரி இ.த.ச. பிரிவு 457, 380ன் கீழ் குற்றம் செய்தார் என அனுமானிப்பதற்கு போதுமான ஆதாரம் இருக்கிறது என்று நீதிமன்றம் கருதியதால் எதிரியின் மீது இ.த.ச 457, 380 பிரிவுகளின் கீழ் குற்றம் செய்தார் என குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரியிடம் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என கோரினார்.

TNPSC - SPECIMEN

அரசுத் தரப்பில் (1) திரு. புருஷோத்தமன், (2) திருமதி லட்சுமி, (3) அ.சா. 1 ன் அயல் வீட்டுக்காரர் திரு. குமார், (4) திரு. ரவி, காவலர் (5) திரு. ராமநாதன், காவல் துறை ஆய்வாளர் ஆகியோர் அ.சா. 1 முதல் 5 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் 9 குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருள் 1 மற்றும் 2 குறியீடு செய்யபட்டது.

அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கானது :

அ.சா. 1 மற்றும் அ.சா. 2 ஆகியோர் கோவை ரேஸ் கோர்சிலிலுள்ள வால்மீகம் ஹவுஸ் என்ற தங்களது வீட்டில் வசித்து வருவதாகவும், 16.01.2008 ஆம் தேதி காலையில் அவர்கள் எழுந்து பார்த்தபோது வீட்டின் மாடிபடிக்கட்டு தாழ்ப்பாள் உடைக்கப்பட்டிருந்தது என்றும் படுக்கையறையிலிருந்த அலமாரியின் உள்ளேயிருந்த தலா இரண்டு சவரன் எடையுள்ள தங்க வளையல்கள் ஐந்தும், தலா ஒரு சவரன் எடையுள்ள தங்க மோதிரங்கள் மூன்றும் காணவில்லை என தெரியவந்தது என்றும், அதேதினம் காலை 9 மணிக்கு அ.சா.ஆ1 புகாரினை காவல் நிலையம் சென்று அளித்ததாகவும் அதன் அடிப்படையில் அ.சா. 5 குற்ற எண். 37/2008 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் காவல் துறையினர் தன்வீட்டிற்கு வந்து புலன் விசாரித்ததாகவும் பின்னர் 06.11.2008 தேதியில் தன் மனைவி காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காண்பித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது மனைவி அ.சா. 2., அ.சா. 1 ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது எதிரி அ.சா. 1 ன் வீட்டின் உள்ளே மாடிபடிக்கட்டு கதவு தாழ்ப்பாளை உடைத்து வீட்டிற்குள் நுழைந்தது தெரியவருகிறது. ஆனால் கைரேகை ஏதும் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

அ.சா. 3 தனது சாட்சியத்தில் அ.சா. 1 வீட்டில் களவு போனது சம்பந்தமாக கேள்விப்பட்டதாகவும் பின்னர் அ.சா. 1ன் வீட்டிற்கு சென்றதாகவும் அப்போது போலிசார் வீட்டினை பார்வையிட்டு பார்வை மகசர் தயாரித்ததாகவும் தான் அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறியுள்ளார். பார்வை மகசரில் உள்ள இவரது சாட்சி கையொப்பம் அ.சா. ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா. 4. தனது சாட்சியத்தில், எதிரியை பாப்பன்பட்டி இடுகாட்டிற்கு அருகில் கைது செய்யப்பட்டது. பற்றியும், எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது பற்றியும், அதில் தான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பின்னர் எதிரி பாப்பன்பட்டி இடுகாட்டிற்கு பின்புறம் உள்ள அவரது வீட்டிலிருந்து எடுத்துக்கொடுத்த நகைகளை கைப்பற்றும்போது உடனிருந்து கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இவரது கையொப்பங்கள் அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

TNPSC - SPECIMEN

அ.சா. 5. தான் 16.01.2008 காலை அ.சா. 1 கொடுத்த புகாரினை பெற்று 9.05 மணிக்கு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 பதிவு செய்ததாகவும் பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்ததாகவும் சாட்சி அ.சா. 3 முன்னிலையில் பார்வை மகசர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா. ஆ.7 தயாரித்ததாகவும் பின்னர் 05.11.2008 ஆம் தேதி இரவு 11 மணிக்கு அவரும் அ.சா.4—லும் பாப்பன்பட்டி இடுகாடு அருகில் ரோந்து பணியில் இருந்த போது சந்தேகத்தக்க வகையில் சென்றுக்கொண்டிருந்த எதிரியை கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும் அதனை இரவு 11.15 மணிக்கு அ.சா. 4 முன்னிலையில் பதிவு செய்ததாகவும் அந்த நேரத்தில் அங்கே அ.சா. 4 மட்டும் தான் இருந்ததாகவும் வேறு தனி நபர் சாட்சிகள் இல்லை என்றும் பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பாப்பன்பட்டி இடுகாட்டிற்கு பின்புறம் உள்ள எதிரியின் வீட்டிலிருந்து அவர் ஆஜர் செய்த 5 தங்க வளையல்கள் (சான்று பொருள். 1), 3 தங்க மோதிரங்கள் (சான்று பொருள். 2) அ.சா 4ன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும் கூறியுள்ளார். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா. 5, அ.சா 1 மற்றும் அ.சா 2 சாட்சிகள் காவல் நிலையத்திற்கு வந்து 06.11.2008 ஆம் தேதி நகைகளை அடையாளம் காண்பித்தது குறித்தும் எதிரியின் மீதான விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட பிறகு அந்த சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் விவரங்களை எதிரிக்கு எடுத்துக்கூறி குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973, பிரிவு 313(1) (b) கீழ் விசாரித்தபோது எதிரி அந்த கூற்றுகளை மறுத்தார்.

எதிரி தரப்பில் எந்த சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

வாதுரைகள் :

அரசு தரப்பு வழக்கறிஞர் அ.சா. 1 முதல் 5 சாட்சிகள் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதால் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். மேலும், அ.சா. 1 மற்றும் 2 தங்கள் வீட்டிலிருந்து நகைகள் காணாமல் போனது குறித்தும் பின்பு காவல் நிலையத்தில் நகைகளை அடையாளம் காண்பித்தது குறித்தும் தெளிவாக சாட்சியங்கள் அளித்துள்ளார்கள் என்றும் அதேபோல் அ.சா. 4 மற்றும் 5 எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது குறித்தும் அதனடிப்படையில் நகைகள் கைப்பற்றபட்டது குறித்தும் எந்த முரண்பாடும் இல்லாமல் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் எனவே எதிரியின் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி இ.த.ச. 457, 380 பிரிவு குற்றங்களுக்கு தண்டனை பெற்றத்தக்கவர் என சமர்ப்பித்துள்ளார்.

TNPSC - SPECIMEN

எதிரி தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரியை உட்கிடை (implicate) செய்ய எந்த சாட்சியமும் சான்றாவணமும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், குறிப்பாக எதிரியின் கைரேகை எதுவும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றவில்லை என்றும், மேலும், தனிநபர் சாட்சிகள் யாரும் எதிரியின் கைது குறித்தோ, பொருட்கள் கைப்பற்றியது குறித்தோ எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்றும் மேலும், அ.சா.4 பற்று சாட்சி என்றும், அவரது சாட்சியம் ஏற்றக்கொள்ள தக்கதல்ல என்றும் வாதித்தார். அதேபோல் எதிரியை இந்த வழக்கில் புனைப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாத நிலையில் அ.சா.5 எதன் அடிப்படையில் 05.11.2008 ஆம் தேதி இரவு பாப்பன்பட்டி இடுகாடு அருகே எதிரியை கைது செய்தார் என்பதற்கும் போதிய விளக்கம் அளிக்கவில்லை என்றும், மேலும் அ.சா. 5 சந்தேகத்தின் பேரில் எதிரியை கைது செய்தார் என்பதனை காண்பிக்கவும் சாட்சியம் இல்லை என்றும், இந்த வழக்கு எதிரிக்கு எதிராக பொய்யாக புனையபட்டது என்றும், இந்த வழக்கில் ஆஜர் செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணங்கள் இந்த வழக்கிற்காக பொய்யாக ஜோடிக்கப்பட்டவை என்றும் வாதுரை எழுப்பியுள்ளார்.

எதிரியின் மீது எந்த குற்றத்திற்கு குற்றச்சாட்டு வனையலாம் என்பதனை குறிப்பிட்டு, மேலே குறிப்பிட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் தீர்ப்பு எழுதுக.

The final report as laid by the Inspector of Police, Coimbatore Race Course Police Station is that on the night of 15.01.2008 at Valmeekam House, Race Course, Coimbatore the accused committed trespass into the house of the defacto complainant by breaking open the staircase door latch and committed theft of 5 gold bangles (2 sovereigns each) and 3 gold rings (1 sovereign each) from the Almirah kept in the bed room. Hence, the accused has committed offences punishable u/s. 457 and 380 IPC.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

On appearance of the accused on receipt of summons, copies of the documents relied upon by the prosecution were furnished to him u/s 207 Code of Criminal Procedure. The accused was questioned and he denied the offence and claimed to be tried. After perusing all the relevant records and hearing both sides, as the court is of the opinion that there is ground for presuming that the accused has committed offences under u/s.457 and 380 IPC, the court framed charges against the accused for offences u/s 457 and 380 IPC. The charges were read over and explained to the accused in Tamil and he was questioned. The accused denied the charges and claimed to be tried.

The prosecution has examined (1) Mr. Purushothaman, (2) Mrs. Lakshmi, (3) Mr. Kumar neighbour of Complainant, (4) Mr. Ravi Constable, and (5) Mr. Ramanathan Inspector of police as PW1 to PW5 and exhibits Ex.P1 to Ex.P9 were marked. Material Objects M.O.1 and M.O.2 were marked.

The brief facts of the prosecution case is as follows:

PW1 and PW2 are residing at Valmeekam House, Race Course, Coimbatore. On 16.01.2008 when they woke up in the morning they found their house staircase door latch broken and 5 gold bangles (2 sovereigns each) and 3 gold rings (1 sovereign each) from the Almirah kept in the bedroom missing. On the same day at 9.00 am PW1 lodged Ex.P1 Police complaint and PW5, registered FIR in crime no. 37/2008 on the basis of Ex.P1 complaint. PW1 has also deposed that the police came to his house and investigated and later on 6/11/2008 his wife went to the police station and identified the jewels. PW2 has corroborated his deposition. He has also deposed that Experts visited the place of occurrence and on examination found that the accused had entered into PWI's house by breaking open the door latch of the staircase and entered the house through the staircase. No finger prints were found.

PW3 has deposed about receiving information about the theft, visiting PW1's house, being present when the police inspected the house and signing as witness in the observation mahazar. His signature in the observation mahazar has been marked as Ex.P2.

TNPSC - SPECIMEN

PW4 has deposed about the arrest of the accused near the burial ground at Pappanpatti by the Investigating Officer, about recording the voluntary confession of the accused and recovery of jewels based on confession from the house of the accused situated behind Pappanpatti burial ground. His signatures in the confession and seizure mahazar are marked as Ex.P3 and Ex.P4.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

PW5 has deposed that he took up investigation on 16/1/2008 after receipt of complaint from PW1 and registering FIR Ex.P5 at 9.05 am. He has also deposed about inspecting the scene of occurrence, preparation of Ex.P6 Observation mahazar and Ex.P7 Rough sketch in the presence of PW3. He has further deposed that on 05.11.2008 at 11.00pm when he along with PW4 were on patrol duty near Pappanpatti burial ground, he arrested the accused who was moving suspiciously, and that on enquiring, the accused gave a voluntary confession statement at 11.15 pm in the presence of PW4 who was the only available witness at that time and in furtherance of said confession, seized M.O.1, 5 gold bangles and M.O.2, 3 gold rings in the presence of PW4 from the house of the accused which is situated behind Pappanpatti burial ground on the outskirts of Coimbatore City. The admitted portion of the confession and the seizure mahazar have been marked as Ex.P8 and Ex.P9. The Investigating Officer has also deposed that PW5, PW1 and PW2 identified the jewels so seized, in the Police station on 6.11.2008. He has further stated that after completing the investigation he filed the charge sheet against the accused.

After the Prosecution side was closed, the incriminating circumstances made out from the evidence was put to the accused and he was questioned under section 313(1)(b) Code of Criminal Procedure, 1973. The accused denied the same. The accused did not let in any evidence.

**Arguments:**

TNPSC - SPECIMEN

SEAL

The Learned Assistant Public Prosecutor would submit that the evidence of PW1 to PW5 are sufficient to prove the case of the prosecution that M.O.1 and M.O.2 were stolen from the house of PW1 and PW2 by the accused by committing house breaking and theft. The cogent and corroborative evidence of PW1 and PW2 in identifying the recovered jewels both in the Police station and in the Court and the cogent and corroborative evidence of PW4 and PW5 in speaking about the voluntary confession of the accused and recovery made pursuant there to would prove the case against accused beyond all reasonable doubt and hence, the accused has to be convicted and sentenced, for the offence under section 457, 380 IPC.

The counsel for the accused would submit that there are no vital facts and evidence to implicate the accused in the occurrence, especially finger prints at the scene of occurrence and evidence of any independent witness to speak about the arrest and recovery. He would submit that PW4 is an interested witness and as such his evidence cannot be considered. The counsel for the accused would further submit that there is no explanation on the side of the prosecution as to why and what made PW5 to arrest the accused on 05.11.2008 near the burial ground Pappanpatti, when he had no evidence to connect the accused with the crime. The evidence of PW5 is also not specific to the extent that he arrested the accused under suspicion. Thus the case of the prosecution against the accused is false and the material objects alleged to have been seized are created for the purpose of the case.

Specify the offence under which the accused can be charged and write judgment.

---